**தலைப்பு – 181 – வினைத்திறன் மேம்பாட்டு அமைச்சு மற்றும் அவ் அமைச்சின் கீழுள்ள திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2013 ஆம் ஆண்டு**

---

இவ் அறிக்கை இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 ஆவது பகுதி | - | அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை |
| 2 ஆவது பகுதி | - | ஒவ்வொரு தலைப்பிற்கும் உரிய விபரமான அறிக்கை |

## I ஆவது பகுதி

**வினைத்திறன் மேம்பாட்டு அமைச்சு மற்றும் அவ் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் கணக்குகள் சம்பந்தமான சுருக்கமான அறிக்கை**

---

### 1. அமைச்சின் கீழுள்ள திணைக்களம்

| **தலைப்பு** | **திணைக்களம்** |
|---|---|
| 328 | மனித வலு வேலைவாய்ப்புத் திணைக்களம் |

### 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்குகள்

**(அ) மொத்த ஏற்பாடுகள் மற்றும் செலவுகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்காக வழங்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய ஏற்பாடுகள் ரூபா 652,300,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையில் இதில் ரூபா 567,393,914 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சு மற்றும் திணைக்களத்தின் தேறிய ஏற்பாட்டில் முறையே ரூபா 27,548,512 தொகை மற்றும் ரூபா 57,357,574 தொகையான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அது தேறிய ஏற்பாட்டில் முறையே 8 சதவீதம் மற்றும் 20 சதவீதம் ஆக இருந்தன. விபரம் பின்வருமாறு.

| செலவினத் தலைப்பு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடுகள் | பயன்பாடுகள் | சேமிப்புக்கள் | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| 181 | 365,100,000 | 337,551,488 | 27,548,512 | 08 |
| 328 | 287,200,000 | 229,842,426 | 57,357,574 | 20 |
| மொத்தம் | 652,300,000 | 567,393,914 | 84,906,086 | 13 |

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்கு அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானவை | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 18101 | 7,500,000 | 5,758,444 | 1,300,000 | 3,562,453 | 17,500,000 | 15,153,881 |
| 32801 | 20,000,000 | 19,300,290 | 8,000,000 | 8,495,407 | 73,000,000 | 43,531,688 |

### 2.3 கட்டுநிதி மற்றும் பொது வைப்புக் கணக்குகள்

#### 2.3.1 கட்டுநிதிக் கணக்குகள்

மனித வலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 6,518,790 ஆக இருந்தது.

#### 2.3.2 பொது வைப்புக் கணக்குகள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்குகளிலுள்ள மீதிகள் ரூபா 3,301,281 கூட்டுமொத்தமாக இருந்தது. விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| அமைச்சு/ திணைக்களம் | வைப்புக் கணக்கு இலக்கம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| வினைத்திறன் மேம்பாட்டு அமைச்சு | 6000-0000-00-0015-0181 | 3,252,137 |
| மனித வலு வேலைவாய்ப்புத் திணைக்களம் | 6000-00-0000-00-0011-15185 | 49,144 |
| மொத்தம் | | 3,301,281 |

## 2 ஆவது பகுதி

--------------------

**ஒவ்வொரு தலைப்பிற்கும் உரிய விபரமான அறிக்கை**

### 1. தலைப்பு 181 – வினைத்திறன் மேம்பாட்டு அமைச்சு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

வினைத்திறன் மேம்பாட்டு அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 செப்தெம்பர் 17 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக

சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் வினைத்திறன் மேம்பாட்டு அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கும், இணக்கக் கூற்றும் இங்கே (அ) தொடக்கம் (இ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 1.4 தொடக்கம் 1.11 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ஒதுக்கீட்டுக் கணக்கில் 181-1-2-1202 மற்றும் 1401 செலவின விடயத்தின் கீழ் வாடகைக்கு பெற்ற மோட்டார் வாகனமொன்றிற்காக செலவிடப்பட்ட வாடகை மற்றும் எரிபொருள் செலவினமான ரூபா 429,808 தொகை கடமைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக ஏற்றுக்கொள்ளக்கூடிய பதிவேடு அமைச்சிடம் காணப்படவில்லை.

### (ஆ) பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 04 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 2,500,000 மொத்தத் தேறிய நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 10 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு செய்யப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 12 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

(iii) 08 செலவின விடயங்களுக்காக வீரமன் நடைமுறையின் மூலம் பெறப்பட்ட ரூபா 2,435,865 கூட்டுத்தொகையான மேலதிக நிதியேற்பாடு ஆண்டின் இறுதி வரையிலும் குறைந்த பயன்பாட்டுடன் காணப்பட்டது.

**(இ) கட்டுநிதிக் கணக்கு**

-------------------------------------

உரிய பிரகாரம் திட்டமிடப்படாமல் 33 சந்தர்ப்பங்களின் போது பெறப்பட்ட ரூபா 297,689 தொகையான முற்பணம் 15 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை செலவிடப்படாமல் மீளத் தீர்க்கப்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

## 1.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

-------------------------------------------------

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்படல்

-------------------------------------------------------------------------------------

2010 திசெம்பர் 17 ஆம் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆம் திகதிய 441 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் படி 2013 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு 2014 மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் அந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சம்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2014 யூன் 02 மற்றும் 2014 நவம்பர் 14 என்ற திகதிகளில் பொருள் மெய்மையாய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

-------------------------------------------

அமைச்சினால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 42,805,770 ஆக இருந்ததுடன் அந்த மீதி வருட மொன்றிற்குக் குறைவானதாகும்.

## 1.5 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | |
| (i) நிதிப்பிரமாணம் 715(2) | - | பொருட்களைக் கையேற்றல், பொறுப்பில் வைத்திருத்தல் மற்றும் விநியோகித்தல் போன்ற பிரதான கடமைகள் களஞ்சியப் பொறுப்பு உத்தியோகத்தரினால் உரிய பிரகாரம் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 751(1) | 5,516,639 | 2012/2013 ஆம் ஆண்டில் 52 சந்தர்ப்பங்களின் போது பெறப்பட்ட பொருள் இருப்புக்கள் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இந்தப் பொருட்களைக் கொள்வனவு செய்து களஞ்சியத்திற்கு பெற்றுக்கொள்ளப்பட்டமைக்கான எச் சான்றுகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | 12,158,148 | 2012 ஆம் ஆண்டு மற்றும் 2013 சனவரி 01 ஆந் திகதி முதல் கணக்காய்வுத் திகதியான 2013 |

| | | |
|---|---|---|
| | | ஒக்தோபர் 17 ஆந் திகதி வரை களஞ்சியத்திலிருந்து பொருட்கள் விநியோகித்தமை எதுவும் இருப்புப் புத்தகத்தில் பதியப்படாமையினால் பரிசோதனை செய்யப்பட்ட திகதியில் காணப்பட்ட பௌதீக இருப்பு மீதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதிருந்தது. |
| (iii) | நிதிப்பிரமாணம் 1647(ஆ) | நிதிப் பிரமாணம் 757(2) இன் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வாகன மெய்மையாய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 1.6 செயலாற்றல்

-----------------------------

**வருடாந்த செயல்நடவடிக்கைகத் திட்டத்திற்கு இணங்க செயற்படாமை**

---------------------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் சந்தர்ப்பங்களின் போது செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயற்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

தேசிய வினைத்திறன் செயலகத்திற்காக 2013 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் மீளாய்வாண்டின் முதல் 03 காலாண்டிற்காக பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட 1,121 செயற்பாடுகள் திட்டமிடப்பட்டிருந்ததுடன் மதிப்பிட்டுப் பெறுமதி ரூபா 52.125 மில்லியனாக இருந்தது. அதில் 623 செயற்பாடுகள் அதாவது 55 சதவீதத்தை நிறைவேற்றுவதற்கு தேசிய வினைத்திறன் செயலகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் 03 செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. மூன்றாவது காலாண்டு இறுதி வரையிலும் இலக்கிடப்பட்ட செலவினம் ரூபா 2 மில்லியன் தொகையான (100 சதவீதமான) ஒரு செயற்பாட்டில் 15 சதவீத பௌதீக இலக்கு மாத்திரமே நிறைவேற்றப்பட்டிருந்தது.

## 1.7 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய வடிவிலானதாக இருந்தன. தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) கணனி மற்றும் கணனி உப பாகங்களைக் கொள்வனவு செய்வதற்காக உரிய நிறுவனத்துடன் ரூபா 2,357,194 விலையில் (பெறுமதிசேர் வரி சேர்த்து) அமைச்சினால் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. வழங்குனரினால் அந்தப் பொருட்களிலிருந்து சில பொருட்கள் ஆகக்கூடியதாக 7 வார காலம் தாமதித்து வழங்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக அமைச்சின் செயலாளரினால் அந்த தாமத காலத்திற்குரிய ரூபா 90,318 தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கு கட்டளையிடப்பட்டிருந்தது. வழங்குனருக்குக் கொடுப்பனவு செய்யும் போது அந்த தாமதக் கட்டணங்களிலிருந்து ரூபா 50,285 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. அதன் படி ரூபா 40,033 தொகை குறைவாக தாமதக் கட்டணம் அறவிடப்பட்டமைக்கான காரணம் அல்லது அதற்குரிய அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மோட்டார் வாகனமொன்றிற்கு மாதமொன்றிற்கு ரூபா 40,000 படி வாடகைக்கு எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் ஆண்டின் போது ரூபா 400,000 தொகை வாடகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. இந்த மோட்டார் வாகனத்தின் பராமரிப்பு, மேலதிக ஓட்டங்களுக்காகச் செலுத்த வேண்டிய பணம், எரிபொருள் பாவனை போன்ற எந்த விடயங்கள் தொடர்பாகவும் அமைச்சு உரிமையாளர்களுடன் உடன்படிக்கை கைச்சாத்திட்டிருக்கவில்லை.

## 1.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) கொள்வனவு வழிகாட்டி நடைமுறைகளைப் பின்பற்றாமை

---------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2011 செப்தெம்பர் 30 ஆந் திகதி கூட்டப்பட்ட கொள்வனவுக் குழுவின் அறிக்கையின் படி ரூபா 2,537,194 தொகையான கணனி மற்றும் கணனி உப பாகங்களைக் கொள்வனவு செய்தல் அவசர சந்தர்ப்பமொன்றாக கருதி அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.5 வழிகாட்டியின் படி நேர் ஒப்பந்த அடிப்படையில் கேள்வி கோரப்படாமல் அரசாங்க வணிகக் கூட்டுத்தாபனத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டிருந்தது. கட்டளையில் குறிப்பிடப்பட்ட சில பொருட்கள் அமைச்சிற்கு 7 வார தாமதத்தின் பின்னர் கிடைத்தமையினால் தேவையின் அடிப்படையில் போட்டியாளர்களிடமிருந்து விலகி மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுத் தீர்மானம் சர்ச்சைக்குரியதாக இருந்தது.

(ii) மேலே (i) இன் படி அமைச்சினால் மேற்கூறப்பட்ட பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக பொருத்தமற்ற கொள்வனவு முறைமை தெரிவு செய்யப்பட்டிருந்தது. இதனால் போட்டியாளர் கேள்வி முறைமை மூலம் தரமான பொருட்களை போட்டி விலையில் பெற்றுக்கொள்வதற்காக இருந்த சந்தர்ப்பம் நழுவிச் சென்றிருந்ததுடன் அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 1.2 வழிகாட்டியில் காண்பிக்கப்பட்ட கொள்வனவின் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) உத்தேசப் பொருள் விடயங்கள் மாத்திரம் குறிப்பிடப்பட்டு அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.6.1 வழிகாட்டிக்கு முரணாக அந்தப் பொருட்கள் மாதிரிகள் குறிப்பிடப்படாது நான்கு நிறுவனங்களிலிருந்து கேள்வி கோரப்பட்டு ரூபா 1,959,079 தொகையிலும் ரூபா 965,130 தொகையிலும் ஆண்டின் போது தளபாடப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(iv) மேற்கூறப்பட்ட மரத் தளபாடம் மற்றும் தளபாடப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.8.3 வழிகாட்டியின் படி தொழில்நுட்ப மதிப்பிட்டுக் குழுவில் அந்த விடயம் தொடர்பான நிபுணத்துவ அறிவைக் கொண்ட உத்தியோகத்தரொருவர் இருக்க வேண்டிய போதிலும் அவ்வாறான உத்தியோகத்தரொருவர் அக்குழுவிற்கு நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) மேற்கூறப்பட்ட கொள்வனவுகளின் போது கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.4.2(அ), (ஆ) வழிகாட்டியின் படி விலை கோரல்களுக்கான விண்ணப்பங்களில் பொருட்களின் பொறுப்புக் காலம் மற்றும் நிபந்தனைகள் தொடர்பாகவும் குறிப்பிட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் ஒப்பந்தக்காரர்கள் தெரிவு செய்யும் போது மாத்திரம் இந்த விடயங்களைக் கவனத்தில் கொண்டு சரியான கேள்விதாரரைத் தெரிவு செய்வதற்கு தடையாக இருந்தது.

## 1.9 நட்டமும் இழப்பும்

-------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டம் மற்றும் இழப்பு தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) ஆண்டின் போது மூன்று வாகனங்களுக்கு ஏற்பட்ட முழுமையான நட்டம் ரூபா 423,560 ஆக இருந்ததுடன் காப்புறுதி நட்டஈடாக ரூபா 356,217 தொகை மாத்திரம் கிடைத்திருந்தது. அதன்படி ரூபா 67,243 தொகையான அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை பொறுப்புவாய்ந்த நபர்களிடமிருந்து அறவிடுவதற்கு கணக்காய்வுத் திகதியான 2014 யூன் 06 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவனத்திற்குச் சொந்தமான மோட்டார் வாகனமொன்று விபத்திற்குள்ளாகியதால் ரூபா 7,686,367 தொகையான நட்ட இழப்பு ஏற்பட்டிருந்ததுடன் விபத்து ஏற்பட்டு 09 மாதங்கள் கடந்திருந்த போதிலும் காப்புறுதி நட்டஈட்டைப் பெற்றுக்கொள்வதற்கோ அல்லது பொறுப்புவாய்ந்த நபரிடமிருந்து அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.10 முகாமைத்துவ நலிவுகள்

களஞ்சியத்திலிருந்து காகிதாதிகளை விநியோகிப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும் 15 நாட்களின் காகிதாதிகள் விண்ணப்பங்களின் விநியோகித்தல்களை தெரிவுப் பரிசோதனை செய்த போது சகல விண்ணப்பத்திரங்களையும் அங்கீகரிக்கும் பதவிநிலை உத்தியோகத்தர், களஞ்சியப் பொறுப்பாளர் மற்றும் பொருட்களைக் கையேற்றவரின் கையொப்பங்கள் என்பன இடப்பட்டிருக்கவில்லை.

## 1.11 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 15 | 11 | 04 |
| (ii) | மூன்றாம் நிலை | 02 | 05 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 799 | 614 | 184 |
| (iv) | ஆரம்ப நிலை | 24 | 20 | 04 |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 04 | 01 | 03 |
| | மொத்தம் | 844 | 647 | 197 |

மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 197 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2. தலைப்பு 328 – மனித வலு வேலைவாய்ப்புத் திணைக்களம்

---

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

---

மனித வலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணைக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 நவம்பர் 19 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணைக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணைக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

### 2.2 கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் மனித வலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும், இணக்கக் கூற்றும் இங்கே (அ) முதல் (ஈ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 2.4 முதல் 2.13 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|
| நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| கணனி, கணனி உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| விடுமுறைப் பதிவேடு | தபான விதிக் கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 1.7 ஆம் பிரிவு |

### (ஆ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான சான்றுகள் திணைக்களத்திடம் காணப்படாமையினால் ரூபா 171,014,619 கூட்டுத்தொகையான பணத்திற்குரிய கொடுக்கல் வாங்கல் தொடர்பாக கணக்காய்வின் பொது திருப்திகரமானதாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

**(இ) பாதீட்டு முரண்கள்**

------------------------------

19 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 8 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான கூற்று**

--------------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 32801 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றின்படி அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 460,322 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ii) திணைக்களத்தின் 340 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ஆதனக் கடன், மோட்டார் வாகனக் கடன், இடர் கடன், விழா முற்பணம் மற்றும் ஏனைய கடன்களுக்காக மீளாய்வாண்டின் இறுதியில் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 43,056,162 ஆகும். கடன் தொடர்பான CC 10 கடன் பதிவேடு நாளதுவரையாக்கப்படாதிருந்தமையால் ஒவ்வொரு மாதத்தின் போதும் அறவிடவேண்டிய கடன் வட்டியின் அளவின் சரியான தன்மை மற்றும் உத்தியோகத்தர்களுக்கு கடன் வழங்கும் போது கழிக்கப்படுகின்ற எல்லை 40 சதவீதத்தை விஞ்சியிருக்கின்றதா என்பதை இலகுவாக பரிசோதனை செய்வதற்கு இயலாதிருந்தது.

## 2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

---

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

---

கீழே வகைப்படுத்தப்பட்டதன் பிரகாரம் சில சொத்துக்கள் விளைவற்று அல்லது குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

(i) நூலகத்திற்குச் சொந்தமான ரூபா 1,019,472 கிரயமான 2,088 புத்தகங்கள் மாத்திரம் உள்ளடக்கப்பட்ட கணனிப் பதிவேடு, 2009 ஒக்தோபர் 14 ஆந் திகதியின் பின்னர் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. இந்த நூலகத்திற்காக 2013 திசெம்பர் 31 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 98,763 பெறுமதியான 241 புத்தகங்களுடன் சேர்த்து சகல புத்தகங்களும் விளைவற்று அறையொன்றில் குவித்து வைக்கப்பட்டிருந்தது.

(ii) செயற்பாடற்ற நிலையிலுள்ள மடி கணனி, மொனிடர், சீபீயூ, மல்டிமீடியா புரெஜெக்டர் உள்ளடங்கலாக 05 வகைகளுக்குரிய 21 நிலையான சொத்து விடயங்கள் 04 வருட அளவிலான காலம் முதல் நிறுவகத்தில் வைக்கப்பட்டிருந்ததுடன் 2009 நவம்பர் 13 ஆந் திகதிய 438 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் படி அந்த நிலையான சொத்துக்களை அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

---

திணைக்களத்தினால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 220,069 ஆக இருந்ததுடன் இரண்டு செலவின விடயங்களில் ரூபா 28,059 தொகையான பொறுப்புக்கள் ஒதுக்கீட்டுக் கணக்கில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

## 2.5 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | | |
| (i) XXIV ஆம் அத்தியாயத்தின் 4.4 ஆம் பிரிவு | 17,359 | திணைக்களத்தில் சேவையாற்றி 2012 ஆகஸ்ட் 28 ஆந் திகதி மரணமடைந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டியிருந்த வெள்ள முற்பண கடன் மீதி அவரின் உரித்தாளிக்கு செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட எந்த ஒரு தொகையிலிருந்தும் கழிக்கப்படுவதற்காக ஓய்வூதியப் பணிப்பாளரிடம் உடனடியாக கோரியிருக்க வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) XII ஆம் அத்தியாயத்தின் 1.9 ஆம் பிரிவு | | 2014 மார்ச் மாதம் முதல் செப்தெம்பர் மாதம் வரை திணைக்களத்தில் சேவையில் ஈடுபட்ட 128 உத்தியோகத்தர்களின் 1417 விடுமுறை விண்ணப்பங்கள் விடுமுறைப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்<br>-------------------------------------------- | | |
| (i) | நிதிப்பிரமாணம் 137 மற்றும் 237 (ஆ) | 362,320 | மீளாய்வாண்டில் நாளிதழொன்றின் 10,000 பிரதிகளை அச்சிடுவதற்காக 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வழங்கும் தனியார் நிறுவனமொன்றிற்கு முழுமையான பட்டியல்களும் செலுத்தப்பட்டிருந்தது. உரிய அச்சிடப்பட்ட நாளிதழ்கள் 2014 ஏப்ரல் 09 ஆந் திகதி திணைக்களத்திற்குக் கிடைத்தமையினால் கொடுப்பனவு செய்யும் போது அங்கீகரித்தல் மற்றும் உறுதிப்படுத்துதல் உரிய வழங்கல் சரியாக கையேற்கப்படாமல் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| (ii) | நிதிப்பிரமாணம் 756 | | நூலகப் புத்தகங்கள் கடந்த தசாப்தத்தினுள் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | பொது நிர்வாகச் சுற்றறிக்கை<br>-------------------------------------------- | | |
| | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 9/2009 ஆம் இலக்க சுற்றறிக்கை | | இயந்திரத்தை பழுதுபார்க்கும் முழுப்பொறுப்பும் 2013 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் உரிய தனியார் கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் 07 மாதங்களுக்கு மேற்பட்ட காலமாக செயற்படாதிருந்த கைவிரல் அடையாள இயந்திரத்தை பழுதுபார்ப்பதற்கோ அல்லது உரிய நிறுவனம் தொடர்பில் உடன்படிக்கையின் படி சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கோ திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை<br>--------------------------------------------<br>2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 1.1.7 ஆம் பந்தி | 460,321 | இடமாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதி இடமாற்றலாகிச் சென்று மூன்று மாதங்கள் கடந்ததன் பின்னர் முற்பணக் கணக்கில் காண்பிக்கப்படாதிருப்பது கவனிக்கப்பட வேண்டிய போதிலும் இடமாற்றலாகிச் சென்று 03 மாதங்களை விஞ்சிய 05 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதி கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. |

## 2.6 செயற்திட்ட அமுலாக்கலின் நலிவுகள்

-----------------------------------------------------------------

வேலைவாய்ப்புத் தொகுதி அலுவலகத்தை மீளமைப்பு செய்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

2011 மே 12 ஆந் திகதிய அமப/11/0882/556/006 ஆம் இலக்க அமைச்சரவைக் குறிப்பின்படி, வேலைவாய்ப்புத் தொகுதிக் கட்டிடத்தை மீளமைப்பு செய்யும் போது நிதி ரீதியான கடப்பாட்டை தீர்ப்பதற்காக ரூபா 10 மில்லியன் மிகை நிதியேற்பாடு 2011 ஆம் ஆண்டின் போது பெற்றுக் கொடுப்பதற்கும் ஏனைய தேவையான நிதியேற்பாட்டிற்காக 2012 ஆம் ஆண்டு முதல் இடைக்கால பாதீட்டு ஒதுக்கீட்டின் கீழ் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் உள்ளடக்குவதற்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உரிய பொறுப்புக்களைத் தீர்க்கும் போது ரூபா 9,391,134 தொகை செலுத்துவதற்காக விலைப்பட்டியல், பட்டியல் மற்றும் எழுத்துமூல சான்றுகள் இன்றி உரிய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அந்தக் கொடுப்பனவுகளைச் செய்யும் போது நிதிப்பிரமாணம் 137, 138 மற்றும் 139 இன் பிரகாரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்ற உத்தியோகத்தர்களினால் கவனிக்கப்பட வேண்டிய விடயங்கள் எதுவும் கருத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 ஆம் ஆண்டில் நிதி ரீதியான கடப்பாடுகளை விடுவிப்பதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும், பிணைப் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியான வேலைவாய்ப்புத் தொகுதியின் ஐந்தொகையில் குறிப்பிடப்பட்டதன் படி ரூபா 18,248,231 தொகையான நிலையான சொத்துக்கள் கையேற்று உடனடியாக நிதிப்பிரமாணம் 756 இன் பிரகாரம் இந்தப் பொருட்கள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொண்டு நிதிப்பிரமாணம் 751 இன் படி பதிவேடுகளுக்குக் கொண்டுவருவதற்கும், பெறுமதிகளைக் கண்டறிவதற்கும், பொருள் மெய்மையாய்வு அறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் 2014 ஒக்தோபர் 01 ஆந் திகதி வரையிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வேலைவாய்ப்புத் தொகுதி அலுவலகம், திணைக்களத்தினால் கையேற்கும் வரை கணனி உட்பட "Server" அலகு செயற்படு நிலையில் காணப்பட்டும், கையேற்கப்பட்டதன் பின்னர் அதனை செயற்பாட்டு நிலையில் பேணிச் செல்வதற்கும் திணைக்களம் தவறியிருந்தது.

## 2.7 செயலாற்றல்

**போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

திணைக்களம் இலக்கிடப்பட்ட செயற்திட்டங்கள் மற்றும் 55 நிகழ்ச்சித்திட்டங்களில் 25 இற்கு அதாவது 45 சதவீதத்திற்குரிய இலக்கை அடைவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இந்த செயற்திட்டத்திற்காக ஆண்டின் போது ஒதுக்கப்பட்ட ரூபா 24 மில்லியன் நிதிஏற்பாடுகளிலிருந்து திணைக்களம் ரூபா 17.9 மில்லியனை மாத்திரம்

செலவிட்டிருந்ததுடன் ரூபா 6.1 மில்லியன் தொகை அதாவது 25 சதவீத நிதியேற்பாடு சேகரிக்கப்பட்டிருந்தது.

## 2.8 வங்கிக் கணக்கு செயற்பாடுகளில் குறைபாடு

### சீராக்கப்பட வேண்டிய மீதி

திணைக்களத்தினால் 2013 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் காணப்படுகின்ற சீராக்கங்கள் தொடர்பான பகுப்பாய்வின் படி 06 மாதங்கள் விஞ்சிய வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 221,335 பெறுமதியான 07 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.9 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையிலானதாக இருந்தன. தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) நாடு முழுவதும் அமைந்துள்ள 317 மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் திணைக்களத்திற்குச் சொந்தமான மனித வள உத்தியோகத்தர்களினால் கையாளப்படுகின்ற தொழில் வழிகாட்டி நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 765,268 தொகை செலவில் 08 வகை கைநூல்கள் அச்சிடப்பட்டிருந்தன.

(ஆ) தேவையான கைநூல்களைத் திட்டமிடல், அச்சிடல், பகிர்ந்தளித்தல் நடவடிக்கைகள் மிகவும் நலிவான நிலையில் காணப்பட்டதுடன் கைநூல்களின் தரவுகள் மற்றும் தகவல்கள் 05 வருடங்களுக்கு மேற்பட்ட பழையதாக இருந்தன.

## 2.10 நட்டமும் இழப்பும்

-----------------------------

2005 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை நிறுவனத்தில் 37 ஊழியர்கள் மற்றும் உத்தியோகத்தர்களினால் ரூபா 41,945 பெறுமதியான 129 புத்தகங்கள் நூலகத்திலிருந்து வெளியே எடுத்துச் செல்லப்பட்டிருந்ததுடன் அவை மீளக் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. இதில் 14 புத்தகங்களின் கிரயம் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.11 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---------------------------------------------------------------

2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் செயற்பாடற்றுக் காணப்பட்ட நூலகத்தின் புத்தக இருப்புக்கள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள அறைக்காக 20 மாத வாடகையாக ரூபா 551,212 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அது சிக்கனமற்ற செலவினமாக அவதானிக்கப்பட்டது.

## 2.12 முகாமைத்துவ நலிவுகள்

------------------------------------------

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 91 நிழற்படப்பிரதி கடதாசிப் பக்கற்றுக்கள் களஞ்சியத்தில் இருக்கும் போது ஆண்டில் 900 பக்கற்றுக்கள் ரூபா 463,380 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டில் எஞ்சியிருந்த 91 பக்கற்றுக்கள் கணக்காய்வுத் திகதியான 2014 ஒக்தோபர் 01 ஆந் திகதி வரை 11 பக்கற்றுக்கள் மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தன. அதன் படி ரூபா 41,190 பெறுமதியான 80 கடதாசி பக்கற்றுக்கள் காலவதியாகும் ஆபத்திற்கு உட்பட்டிருந்தது.

## 2.13 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 13 | 09 | 04 |
| (ii) | மூன்றாம் நிலை | 02 | - | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 673 | 543 | 130 |
| (iv) | ஆரம்ப நிலை | 14 | 10 | 04 |
| | மொத்தம் | 702 | 562 | 140 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் இறுதி வரையில் 140 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) திணைக்களத்தில் நூலகமொன்று தாபிக்கப்பட்டிருந்த போதிலும் நூலகப்பதவியொன்று அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.